**Principal District Munsif Court, Sankarankovil.**
**OS.No.25/2017**

தேதி : 14.03.2025

வா.சா.1 – வசந்தி

**வா.சா.1 மீண்டும் ஆஜர். சத்தியப்பிரமாண வாக்குமூலத்தின்பேரில் 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-**

நான் கிரையம் வாங்கியதாக சொல்லும் பிராது 1வது தபசில் சொத்து, நான் கிரையம் வாங்கிய காலத்தில் காலிமனையாக இருந்தது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய காலத்தில் பிராது 1வது தபசில் சொத்தில் எந்தக் கட்டுமானமும் இல்லை என்றால் சரிதான். நான் பிராது 1வது தபசில் சொத்தில் எந்த ஆண்டு வீடு கட்டினேன் என்றால் 2011ம் ஆண்டில் வீடு கட்டினேன். வழக்குச் சொத்தின் சர்வே எண்.258/4A-க்கான பட்டாவை நான் பார்த்துள்ளேன். வழக்குச் சொத்தும் அதனைச் சுற்றியுள்ள இடமும் 2012ம் ஆண்டிலேயே குடியிருப்பு இடங்களாக நத்தமாக வகைப்பாடு செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். பிராது 1வது தபசில் சொத்திற்கு பட்டா பெறுவதற்கு நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. பிராது 1வது தபசில் சொத்தை நான் கிரையம் பெற்ற அசல் ஆவணத்தை எந்த வங்கியில் வைத்து கடன் வாங்கினேன் என்றால் எனக்குத் தெரியாது. எனது கணவருக்குத்தான் வங்கியின் பெயர் தெரியும். இந்த வழக்கைத் தாக்கல் செய்தவற்கு முன்பே நில அளவையர் மூலமாக எங்கள் வீட்டை அளவீடு செய்தோம் என்றால் சரிதான். அவ்வாறு அளவீடு செய்தபோது, நில அளவையர் வழக்குச் சொத்திற்கான புலவரைபடத்தை வைத்து கிழமேல், தென்வடல் அளவுகளை அளவீடு செய்தார் என்றால் சரிதான். நில அளவையர் சொத்தை அளவீடு செய்தபிறகு, என்னுடைய வீட்டிற்கான புலவரைபடத்தை நில அளவையர் எங்களிடம் கொடுத்தார் என்றால் சரிதான். நில அளவையர் எங்களிடம் வழங்கிய புலவரைபடத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நில அளவையர் வழங்கிய புலவரைபடத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், புலவரைபடத்தை தாக்கல் செய்தால் இந்த வழக்கு எனக்கு விரோதமாகிவிடும் என்பதால் அதனை மறைத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. வழக்குச் சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யும்படி, நான் மனுதாக்கல் செய்தேன் என்றாலும் அம்மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தைப் பார்வையிட்டு அளவீடு செய்தார் என்றால் சரிதான்.

அவ்வாறு நான் மனு தாக்கல் செய்தநிலையில், நில அளவையர் உதவியுடன் வழக்குச் சொத்தைப் பார்வையிட நான் பரிகாரம் கோரவில்லை என்றாலும், நீதிமன்ற ஆணையர் மட்டுமே வழக்குச் சொத்தைப் பார்வையிட்டார் என்றாலும் சரிதான். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை எனது வழக்கறிஞர் எனக்குப் படித்துக் காண்பித்தார். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தபசில் சொத்தை நில அளவையர் மூலம் அளவீடு செய்தால் மட்டுமே வழக்குச் சொத்தின் கிழமேல் தென்வடல் அளவுகள் சரியாகத் தெரியவரும் என்று சொல்லியிருந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட சொத்து பிராது 1வது தபசில் சொத்திற்கு மேல்புறம் உள்ளது என்றால் சரிதான். பிராது 1வது தபசில் சொத்திற்கு மேல்புறம் உள்ள இடத்தை 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு 14.07.2017 ம் தேதியன்று கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதியிடமிருந்து 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய தேதியிலிருந்து, பிராது 1வது தபசில் சொத்திற்கு மேல்புறமுள்ள நிலத்தை 2ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால் 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தற்போதுதான் தெரியவந்தது. பிராது 1வது தபசில் சொத்து வேறு என்றாலும், 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த சொத்து வேறு என்றாலும் சரிதான். 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விவரங்களை எனது வழக்கறிஞர் மூலம் நான் தெரிந்துகொண்டேன். 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், அவர் கிரையம் பெற்ற சொத்தின் சர்வே எண் மற்றும் அளவுகளை தபசில் சொத்தாக காண்பித்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய சொத்தை 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்குப் பாத்தியப்பட்ட சொத்தை 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டதாக கூறி, 2ம் பிரதிவாதியை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். பிராது 2 வது தபசில் சொத்து, பிராது 1வது தபசில் சொத்தின் ஒரு பகுதி என்பதையும், பிராது 3ம் தபசில் சொத்து ஆக்கிரமிப்பு என்பதையும் நிரூபிக்க நில அளவையர்மூலம் சொத்தை அளவீடு செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நீதிமன்ற ஆணையர் மூலம் சொத்தை அளவீடு செய்தேன். அவ்வாறு நீதிமன்ற ஆணையர் மூலம் சொத்தை அளவீடு செய்தபோது, நில அளவையர் உதவியுடன் சொத்தை அளவீடு செய்யவில்லை என்றால் சரிதான்.

2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கண்ட தபசில் சொத்தில் 2ம் பிரதிவாதி கடந்த 8 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார் என்றால் நான் வெளியூரில் குடியிருந்து வருவதால் எனக்கு நேரடியாகத் தெரியாது. என்னுடைய வழக்கறிஞர் மூலமாகத்தான் எனக்கு அந்த விவரம் தெரியும். 2ம் பிரதிவாதி சங்கரன்கோவில் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். பிராது 2வது தபசில் சொத்து , பிராது 1வது தபசில் சொத்தின் ஒரு பகுதி என்பதும், பிராது 3ம் தபசில் சொத்து ஆக்கிரமிப்பு என்பதும் பொய் என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே, பிராது 1வது தபசில் சொத்தின் புலவரைபடத்தை மறைத்து வழக்குத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் மூலம் நான் கிரையம் பெற்ற சொத்திற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே நத்தம் புல எண் வழங்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி தேவையின்றி கட்சி சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. எனவே 2ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்குத் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> :** இல்லை.

(Sd.) xxxxxxx
Principal District Munsif,
Sankarankovil.